தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1968 ஆகஸ்ட் 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 54, 55, 137-லிருந்து 148 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

புதுச் சிறப்பு அங்காடிகள்

*149 வினா.—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம், சூலூர், சோமனூர் போன்ற நகரங்களில் சிந்தாமணி மார்க்கெட் (கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்) ஏற்படுத்துவதற்கு அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இதைப்பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் கவனத்தில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு முறையிலே சூப்பர் மார்க்கெட்ஸ் எந்த அடிப்படையிலே ஆரம்பிக்கப்படுகின்றன ? லட்சம் பேர்கள் ஜனத்தொகை கொண்ட ஊர்களில் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிகிறது. அப்படியானால் திருப்பூரிலே லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அங்கு ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறப்பு அங்காடிகள் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுகிறோம். எந்தெந்த ஊர்களுக்கு அனுமதி கேட்கிறோமோ அவற்றைப் பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கிறார்கள். அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இடங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. நாம் அனுப்பிய திட்டங்களில் தர்மபுரியில்தான் 28 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறதென்று சொல்லி, அங்கு தேவையில்லை என்று மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. ஆகையால் அங்கு ஆரம்பிக்கப் படவில்லை. எந்த ஒரு ஊரிலே சிறப்பு அங்காடி ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்கிறோமோ, அந்த ஊரிலே சிறப்பு அங்காடி வைக்க முடியுமா என்று ஆராய்ந்ததற்குப் பிறகுதான் அதை வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய முடியும்.

THIRU K. VINAYAKAM : Whereas it is popularly believed that super-markets are nothing but white elephants, what is the experience of this Government after they have come to power ? Is the super-market at Madras working at a loss or at a profit and what is the amount of loss or profit ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறப்பு அங்காடியைப் பற்றி அதே கருத்து ஏற்கனவே கனம் அங்கத்தினர் அவர்களால் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கணவே இருக்கிற அங்காடிகள் பல லாபத்தோடு நடை

பெற்று வருகின்றன. லாபம் இல்லாமல் இருக்கிற சிறப்பு அங்காடிகள் என்ன காரணத்தால் லாபகரமாக நடைபெறவில்லை என்று ஆராயப்பட்டு அவற்றையும் லாபத்தோடு நடத்த முடியும் என்பதற்கு முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு லாபத்தோடு நடத்த முடியும் என்ற எண்ணத்தில் அரசு இருக்கிறது. இப்போதுள்ள சிறப்பு அங்காடிகளை பயன் உள்ளவைகளாக நடத்த முடியும் என்று அரசாங்கம் நம்புகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : எந்தெந்த நகரங்களில் சிறப்பு அங்காடிகள் வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கோரினார்கள் ? எது எதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆறு சிறப்பு அங்காடிகள் நடத்த வேண்டுமென்று முடிவு செய்தோம். கடலூர், தஞ்சை, நாகர்கோவில், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, தர்மபுரி ஆகிய இடங்களில் ஆரம்பிக்க அனுமதி கேட்கப்பட்டது. அவற்றிலே தர்மபுரியிலே ஜனத் தொகை போதாது என்று சொல்லிவிட்டார்கள். மற்ற இடங்களில் நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பெரு நகரங்களில் ஏழைத் தொழிலாளர்களுக்கு மலிவான விலையில் பொருள்கள் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அப்படியிருக்கும் போது எந்த அடிப்படையில் அவற்றை ஆரம்பிக்க வேண்டுமென்று மாநில அரசு சிபார்சு செய்கிறது ? எந்த அடிப்படையில் மத்திய அரசு அவற்றிற்கு அனுமதி தருகிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முதலிலே கூறியபடி சிறப்பு அங்காடிகளைப் பெரிய அளவிலே நடத்துவதற்கு அதிலே போடப்படுகின்ற முதலின் அடிப்படையில் வியாபாரம் நடக்குமா என்பதையும் ஜனத் தொகை அடிப்படையையும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே சிபார்சு செய்கிறோம். அவற்றை மத்திய அரசு பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கிறார்கள். ஒரு நகரத்தைத் தவிர மற்ற இடங்களுக்கு ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் இதற்குப் பண உதவி செய்கின்ற காரணத்தால் அவர்களுடைய அனுமதியின் பேரில்தான் நடைபெறுகிறது.

திரு. கே. என். குமாரசாமி : பல்லடம் போன்ற இடங்களைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் விவசாயிகள் ஏராளமாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்குக் குறைந்த விலையில் பொருள்களைக் கொடுக்கக் கூடிய அளவில் சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் சிறப்பு அங்காடிகள்தான் இருக்க வேண்டுமென்பதல்ல. சிறிய சிறிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் வைத்து நடத்த முன்வந்தால், அதைப் பரிசீலிப்பதற்கு அரசு தயாராய் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாகர்கோவிலில் சிறப்பு அங்டிகாடி ஏற்படுத்துவதற்கு பூர்வாங்கமான நடவடிக்கைகள் எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நீண்ட நெடுங்காலமாக முயற்சியிலே தான் இருந்து வருகிறது ; எப்போது முற்றுப்பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு திறப்பு விழா செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இதிலிருந்து அது திறப்பு விழா செய்யக்கூடிய கட்டத்தில் இருக்கிறது என்று நினைக்கிறேன்.